செய்தி வெளியீடு எண் : 052 நாள் : 09.01.2023

## சமூகப் பாதுகாப்புத் துறை

## சமூகப் பாதுகாப்புத் துறை மற்றும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) உடன் இணைந்து அரசினர் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள குழந்தைகளின் மேம்பாட்டிற்காக புத்தொழில் (Startups) நிறுவனங்களுக்கு ஆணை வழங்குதல் மற்றும் சிறப்பு தபால் தலைகள் வெளியீடு

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் அரசினர் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள குழந்தைகளின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) உடன் இணைந்து 3 புத்தொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.29,99,900/- செலவில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இந்தியாவின் 75-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் பொருட்டு சமூக பாதுகாப்புத் துறையின் முத்திரையை தபால்துறை மூலம் 12,000 சிறப்பு தபால் தலைகளாக அச்சிட்டு அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்முறைகளுடன் கூடிய இயற்கை விவசாயத்தின் பாரம்பரிய அறிவை கற்பித்தல், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ்-ல் அடிப்படை மற்றும் இடைநிலை பயிற்சிகள் மற்றும் குழந்தைகளை சமூகத்துடன் இணைப்பதற்கு பொருத்தமான திறன் வளர்ப்பு பயிற்சி, ஆலோசனை மற்றும் வாழ்க்கை திறன் பயிற்சிகள் ஆகியவற்றை 3 புத்தொழில் நிறுவனத்தின் மூலம் அரசினர் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள 476 குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும் தபால்துறை மூலம் தமிழ்நாட்டில் உள்ள நகர மற்றும் கிராமப்புற மக்களுக்கு குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒரு இலட்சம் மேக்தூத் அஞ்சல் (Meghdoot Post Card) அட்டைகள் ரூ.2,25,000/-க்கு சமூக பாதுகாப்புத் துறையால் அச்சிடப்பட்டுள்ளது.

தபால் அலுவலக சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர்களிடையே குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்த செய்திகளை பரப்ப சேமிப்பு கணக்கு புத்தகங்களின் பின்புறத்தில் குழந்தைகள் உரிமைகள், குழந்தைகள் திருமணத் தடுப்பு சட்டம், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகியவை குறித்தான விழிப்புணர்வு

வாசகங்கள் ரூ.5,35,500/– மதிப்பில் அச்சிடப்பட்டு தபால் நிலையங்கள் மூலம் நகர மற்றும் கிராமப்புற மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் அவர்கள் இன்று (09.01.2023) தலைமைச் செயலகத்தில் மேற்காணும் திட்டங்களை துவங்கி வைத்தார். மேலும், இதன் தொடர்ச்சியாக 3 புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆணையினையும் மற்றும் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தும் விதமாக சிறப்பு தபால் தலைகளையும் வெளியிட்டார்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in